සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை நில அளவையாளர்கள் சேவையின் (இ.நி.அ.சே) வகுப்பு II தரம் II இலுள்ள அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2017 (2018)**

Second Efficiency Bar Examination for Officers in Class II, Grade II of the Sri Lanka Surveyors' Service (SLSS) - 2017 (2018)

**(02) நில அளவை முகாமைத்துவம்**
Survey Management

**மூன்று மணித்தியாலங்கள்**
Three hours

**முதலாவது** வினா உட்பட மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

1. (i) நீங்கள் ஒரு எளிய காணித் தகவல் முறைமையை நிறுவப் போகிறீர்கள் என்று கருதுங்கள். இதைத் தொடங்க முன்னர் கவனிக்க வேண்டிய மிக முக்கிய கூறுகளைக் குறிப்பிடுக. *(07 புள்ளிகள்)*

   (ii) மேற்கூறப்பட்டவற்றில் **மூன்றை** தற்போது நில அளவைத் திணைக்களத்தில் இருக்கும் முறையுடன் தொடர்புபடுத்தி விளக்குக. *(06 புள்ளிகள்)*

   (iii) எவ்வாறு புதிய தொழில்நுட்பம் / தகவல் தொழில்நுட்பம் தற்போதைய நில அளவை வேலைகளின் செயல்திறனை மேம்படுத்துவதற்கு புதிய நில அளவை நிபுணர்களால் பயன்படுத்தப்படுகின்றது என்பதனை விளக்குக. *(07 புள்ளிகள்)*

2. (i) இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் பிரதான பணிகள் எவை? *(05 புள்ளிகள்)*

   (ii) மேலே உள்ள பணிகளைச் செய்வதில் சிறப்பாக பராமரிக்க வேண்டிய முக்கிய அம்சங்கள் என்ன? *(05 புள்ளிகள்)*

   (iii) இலங்கை நில அளவைத் திணைக்களத்தில் உள்ள ஒரு நில அளவையாளரின் முக்கிய பொறுப்புக்களைக் குறிப்பிட்டு அவற்றை நீங்கள் எவ்வாறு செயற்படுத்துவீர் என்பதனைக் குறிப்பிடுக. *(05 புள்ளிகள்)*

   (iv) சரிபாக்கப்பட்டு அச்சிடப்பட்ட வரைபடமானது காப்பக எண்முறைத் தகவில் இருந்து வேறுபடுவதாக அவதானிக்கப்பட்டது. இந்தப் பிரச்சினையை தவிர்க்க ஒரு நில அளவையாளர் தனது வேலைச் செயல்முறையை எவ்வாறு நிர்வகிக்க முடியும் என்பதை விளக்குக. *(05 புள்ளிகள்)*

3. நில அளவையாளர் ஒருவரான நீர் அரச திணைக்கள வாகனத்தில் கள வேலைக்காக பயணம் செய்கையில் அவ்வாகனத்திற்கு ஒரு விபத்து ஏற்பட்டுள்ளதாக கருதுக.

   (i) அவசர விபத்து ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் நீங்கள் எடுக்கும் நடவடிக்கைகள் மற்றும் நில அளவையாளர் என்ற முறையில் உங்கள் பொறுப்புக்கள் எவை என்பதை விளக்குக. *(08 புள்ளிகள்)*

   (ii) விபத்து நடைபெற்ற நேரத்தில் நீங்கள் வாகனத்தில் **இருக்கவில்லை** எனவும், நீங்கள் வாகனத்தின் பொறுப்பாளர் எனவும் கருத்தில் கொள்ளுங்கள். அச்சந்தர்ப்பத்தில் நீர் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புக்கள் மற்றும் கடமைகளினை தெளிவுப்படுத்துக. *(10 புள்ளிகள்)*

   (iii) வாகன விபத்துக்கான இறுதி விசாரணைக் குழுவை நியமிப்பவர் யார்? *(02 புள்ளிகள்)*

4. (i) புலத் திருத்திற்கான 1 : 50 000 வரைபடத்தாள் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த செயலை சாதாரணமான வழிமுறையை பின்பற்றாமல் குறுகிய காலத்திற்குள் செய்வதற்கு அறிவுறுத்தப்படுகிறீர்கள். இந்த பணியில் நீங்கள் பின்பற்றப் போகின்ற வழிமுறைகள் பற்றி விளக்குக. *(03 புள்ளிகள்)*

   (ii) "நில அளவையாளர் தனது பணியில் இலாபகரமாக ஈடுபடுதல் வேண்டும்." இந்தக் கூற்றை சுருக்கமாக விளக்குக. *(05 புள்ளிகள்)*

   (iii) உங்களுக்கு ஒரு குறிப்பிட்ட பகுதியில் உள்ள நில அளவைத் திணைக்களத்தில் கிடைக்கக்கூடிய எல்லா எண்முறை நில பிரதேசவியற் தரவுகளும் தரப்பட்டுள்ளது எனின்,

      (அ) அந்தப் பிரதேசத்தினுள் குடியிருப்பு தேவைக்கான தகுந்த நிலத்தை கண்டுபிடிப்பதற்கு வேண்டிய குறிகாட்டிகளைப் பெயரிடுக. *(05 புள்ளிகள்)*

      (ஆ) குடியிருப்பு தேவைக்கான நில ஒதுக்கீட்டை களத்திற்கு செல்லாமலே மிகவும் பொருத்தமான பொருளாதார அடிப்படையில் நிலத்தைக் கண்டறிவதற்கான வழிமுறைகளை முன்மொழிக. *(07 புள்ளிகள்)*

[பக் 2 ஐப் பார்க்க.

**5.** (i) "நில அளவைத் திணைக்களத்தினால் தற்போது பல தரவுத்தளங்களை பராமரிக்கிறது. எனவே இது திணைக்களத்தின் அன்றாட வேலைகளை சுலபமாக்குகிறது."

(அ) இந்த கூற்றை வலியுறுத்துவதற்குகான **ஐந்து** காரணங்களை உதாரணங்களுடன் தெளிவுப்படுத்துக. *(05 புள்ளிகள்)*

(ஆ) தற்போது நில அளவைத் திணைக்களத்தில் செயல்படும் **ஐந்து** தரவுத் தளங்களைக் குறிப்பிடுக. *(05 புள்ளிகள்)*

(ii) (அ) ஒரு தொழில்முறை நில அளவையாளர் என்ற முறையில், பாரம்பரிய அச்சிடப்பட்ட களப்புத்தகத்தை பாவிப்பதன் நன்மைகள் **மூன்றை** ஒரு நிர்வாக முன்னோக்கின் அடிப்படையில் எழுதுக. *(05 புள்ளிகள்)*

(ஆ) எண்முறை வடிவத்தில் மட்டும் களப்புத்தகத்தை வைத்திருப்பதன் **மூன்று** நன்மைகளை பெயரிடுக. *(05 புள்ளிகள்)*

**6.** (i) ஒரு தொழில்முறை நில அளவையாளர் என்ற முறையில் பின்வரும் ஒவ்வொரு சூழ்நிலைகளில் நீங்கள் எடுக்கும் நடவடிக்கைகளினை விபரிக்க.

(அ) உமக்கு ஒரு புல உதவியாளர் மட்டும் வழங்கப்பட்டு $\frac{1}{2}$ ஹெக்ரேயரிலும் குறைந்த காணியின் வெளிப்புற எல்லையை அளவிடக் கோரப்பட்டிருத்தல்.

(ஆ) நீர் ஒரு குறிப்பிட்ட நில அளவை வேலைக்கு தயாராக இருக்கும் போது, உமக்கு கள வேலைக்கு ஒதுக்கப்பட்ட வாகனம் சில அவசரமான பழுதுபார்ப்புக்கள் காரணமாக உடனடியாக சரி செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருத்தல்.

(இ) வீதி விரிவாக்கத்திற்கான நிலம் சுவீகரிக்கும் அளவை செய்யும் நாள் அன்று காணிச் சொந்தக்காரர்களினால் எதிர்ப்பு தெரிவித்தலை நீங்கள் அவதானிக்கும் சந்தர்ப்பத்தில்

(ஈ) நில அளவையாளரின் அளக்கும் உபகரணமானது புலத்தில் தீவிரமாக சேதமடைந்திருப்பின்.

*(02 × 4 = 08 புள்ளிகள்)*

(ii) ஒவ்வொரு நில அளவையாளரும் நில அளவை மேற்கொள்ளும் போது அதன் தரத்தை பராமரிப்பதற்கு பொறுப்பாளிகள் ஆவார். எண்முறைத் தரவுகளின் தரத்தினை பராமரிக்க நில அளவையாளர் பயன்படுத்தப்படும் வழிமுறைகளை விளக்குக. *(05 புள்ளிகள்)*

(iii) ஒரு நில அளவையாளரினால் தயாரிக்கப்பட்ட வரைபடத்தினை சரிபார்த்து முழுமைப்படுத்திக் (Completeness) கொள்ளும் முறையை முன்மொழிக. *(03 புள்ளிகள்)*

(iv) எண்முறைத் தரவின் பாதுகாப்பிற்காக நில அளவையாளர் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் யாவை? *(04 புள்ளிகள்)*

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි/
முழுப் பதிப்புரிமையுடையது/
All Rights Reserved/

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**இலங்கை நில அளவையாளர் சேவையின் (இ.நி.அ.சே) வகுப்பு II தரம் II இலுள்ள அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - 2017 (2018)**

Second Efficiency Bar Examination for Officers in Class II Grade II of the Sri Lanka Surveyors' Service (SLSS) - 2017 (2018)

**(01) காணிச் சட்டம் மற்றும் நில அளவைகள்**
Land Law & Surveying of Lands

**மூன்று மணித்தியாலங்கள்**
Three hours

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

---

**1.** (i) (அ) மாவட்ட நீதிமன்றம் மூலம் நில அளவையாளர் நாயகத்திற்கு நீதிமன்ற ஆணைக்குழு விநியோகிக்கப்படுவது இலங்கை நீதிமன்ற சட்டகட்டளைக் கோவையின் எந்த வாசகத்திற்கேற்பவாகும்?

(ஆ) நீதிமன்ற கட்டளை அளவையில் எல்லைகள் எவ்வாறு குறித்துக் காட்டல் வேண்டும்?

(இ) இவ்வாறு குறிப்பிடப்படும் எல்லைகளை யாருக்கு சுட்டிக் காட்டப்படவேண்டும்? *(06 புள்ளிகள்)*

(ii) நீதிமன்ற கட்டளை அளவையில் எவ்வாறு கிடைப்படம் தயாரித்தல், நிலைப்படுத்தும் சுவடு வரை தயாரித்தல், காணித்துண்டு இலக்கமிடல், மற்றும் காணித்துண்டு பட்டியலிடல் என்பன செய்வதைப் பற்றி விபரமாக விவரிக்க. *(08 புள்ளிகள்)*

(iii) (அ) எந்த சட்டப் பிரிவின் கீழ் காணி சுவீகரிப்புக்கான அளவைக் கோரிக்கையானது மாவட்ட நில அளவை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றது?

(ஆ) ஒரு குறிக்கப்பட்ட காணிக்கு ஒன்றுக்கு மேற்பட்ட உரிமைக் கோரல்கள் இருந்தால் நில அளவையாளர்கள் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும்? *(06 புள்ளிகள்)*

**2.** (i) (அ) இலங்கை நில அளவைச் சட்டத்தின் படி நில அளவையாளர் நாயகத்தின் செயற்பாடுகள் என்ன?

(ஆ) நில அளவைச் சட்டத்தின் நில அளவையாளர் நாயகத்தின் அதிகாரங்கள் நில அளவைத் திணைக்களத்தின் மற்றைய அலுவலர்களுக்கு எந்தப் பிரிவின் கீழ், வழங்கப்பட்டுள்ளது? *(08 புள்ளிகள்)*

(ii) (அ) காணி உரித்துப் பதிவின் முக்கிய படிமுறைகள் என்ன என்பதைக் குறிப்பிட்டு அந்த ஒவ்வொரு படிமுறையும் தொடர்புடைய திணைக்களங்களைக் குறிப்பிடுக.

(ஆ) காணி உரித்துப் பதிவுச் சட்டத்தின் எத்தனையாம் பிரிவின் கீழ் நில அளவையாளர் நாயகத்தினால் கடத்திரள்படம் தயாரிக்கப்படும்? *(06 புள்ளிகள்)*

(iii) கடத்திரள் அளவைகள் நடைபெறும் பிரதேசத்திலே காணி தொடர்பான ஆவணங்களை ஆய்வு செய்வதிலும் எல்லைகளை குறித்தலிலும் நில அளவையாளரின் பங்கு என்ன? *(06 புள்ளிகள்)*

**3.** (i) (அ) தற்போதைய சூழலில் அளவையியலுக்கும் படமாக்கலுக்கும் ஆக நில அளவைத் திணைக்களத்தில் பயன்படுத்தப்படும் நவீன தொழில் நுட்பங்கள் என்ன?

(ஆ) அளவை மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்படும் தொழில்நுட்ப முறைகள் **இரண்டை** விபரிக்க.

(இ) படமாக்கல் மேற்கொள்வதற்கு பயன்படுத்தப்படும் தொழில்நுட்ப முறைகள் **இரண்டை** விபரிக்க. *(08 புள்ளிகள்)*

(ii) (அ) கடத்திரள் அளவையில் கட்டுப்பாட்டு போகுவிற்கு பராமரிக்கப்பட வேண்டிய துல்லியத் தன்மைகளின் வகைகள் என்ன?

(ஆ) கடத்திரள் அளவைப் பிரதேசமொன்றில் பிற்கால அளவையின் போது எல்லைப் புள்ளிகளை என்ன கிடையான நிலையத் துல்லியத்துடன் தாபித்தல் வேண்டும்? *(04 புள்ளிகள்)*

(iii) (அ) எல்லை அம்சங்களுக்கான (boundary features) தரவுச் சேகரிப்பின் விசேஷ தேவைப்பாடுகள் மற்றும் வரையறைகள் எவை?

(ஆ) நீங்கள் பூரணமாணியை (total station) பாவித்து களவேலைகளை முடித்தபின் எவ்வாறு எண்முறை கிடைப்பட வரைபடத்தை தயாரிப்பீர்கள்? *(08 புள்ளிகள்)*

[பக் 2 ஐப் பார்க்க.

4. (i) (அ) பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்கள் தொழில் முறை தவறான நடத்தைக்கு குற்றவாளி எனக் கருதப்படும் சந்தர்ப்பங்கள் எவை?

(ஆ) தொழில் முறை தவறான நடத்தைக்கான நில அளவைச் சட்டத்தின் பிரிவு என்ன? *(06 புள்ளிகள்)*

(ii) ஒரு புதிய அளவையில், புதிய அளவையின் பரப்பளவு ஆனது முந்திய அளவையின் பரப்பளவுடன் ஒப்பிடப்படவேண்டும். இந்த பரப்பளவு ஒப்பீட்டில் என்ன வகையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும்? *(06 புள்ளிகள்)*

(iii) மேற்பார்வை உத்தியோகத்தரினால் எண்முறை கிடைப்பட வரைதல் தரக்கட்டுப்பாடு செய்யும் போது சரிபார்க்க வேண்டிய அடிப்படை காரணிகள் என்ன? *(08 புள்ளிகள்)*

5. (i) மத்திய தர வகுப்பினருக்கான குடியேற்றங்கள் மற்றும் ஏனைய முக்கிய திட்டங்களில் பாதைகளுக்கு இடஒதுக்கீடு செய்யும் போது எவ்வளவு தூரங்கள் இடவேண்டும்? *(06 புள்ளிகள்)*

(ii) (அ) விலங்குகள், தாவரங்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தேசிய ஒதுக்கீடுகளாக வனப் பாதுகாப்பு திணைக்களத்தால் பிரகடனப்படுத்திய இடங்கள் எவை?

(ஆ) வனப் பாதுகாப்பு ஒதுக்கீட்டுப் பிரதேசத்தின் எல்லைகளிலிருந்து எவ்வளவு தூரமானது அபிவிருத்தித் திட்டங்களுக்கு தடை அல்லது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது? *(06 புள்ளிகள்)*

(iii) 1 : 10 000 பிரதேசவியற் படத் தரவுகள் களப் பரீட்சிப்பதில் நில அளவையாளரின் கடமைகள் எவை? *(08 புள்ளிகள்)*

* * *